**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 105/2026**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயகுமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பாண்டி | தொழில் | : | சார்பு ஆய்வாளர் |
| கிராமம் | : | சென்னை | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Monday of 03.08.2026.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பெருநகர சென்னை காவல் ஜே-9 துரைப்பாக்கம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வாசுதேவநல்லூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 24.05.2022ம் தேதி, 13.00 மணிக்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சுடர்ஒளி, தலைமைக்காவலர் தங்கராஜ் மற்றும் காவலர் ராஜேஷ்கண்ணா ஆகியோர் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது, டி.ராமநாதபுரம் – கூடலூர் ரோட்டிலுள்ள இராயகிரி விலக்கு பக்கம் வாகனத்தணிக்கை செய்தபோது, டி.ராமநாதபுரத்தில் இருந்து இருசக்கரவாகனத்தில் இருவர் வந்தார்கள். அவர்கள் போலீஸ் பார்ட்டியை கண்டதும் திரும்பி போக எத்தனித்தவர்களை மடக்கி பிடித்து விசாரிக்க வண்டியை ஓட்டியவர் அவர் பெயர் மணிகண்டன் என்று சொன்னார். அவருக்கு பின்னால் இருந்தவர் பெயர் தங்கமாரி என்று கூறினார். அவர்

ஓட்டி வந்த பைக் TN 65 Y 2851 கருப்பு கலர் பஜாஜ் டிஸ்கவர் இருசக்கரவாகனம் ஆகும்.

மணிகண்டன் மற்றும் தங்கமாரி இருவருக்கும் நடுவில் இருந்த வெள்ளை நிற உரச்சாக்கு பையை சோதனை செய்தபோது, அதில் 180 மிலி பிடிக்கக்கூடிய கோல்டன் சாய்ஸ் பிராந்தி 76 பாட்டில்கள், 180 மிலி பிடிக்கக்கூடிய மானிட்டர் 3டி கோல்டு ரம் 20 பாட்டில்கள், 180 மிலி பிடிக்கக்கூடிய 1மேன் ஆர்மி XXX 3 பாட்டில்கள், 180 மிலி பிடிக்கக்கூடிய எக்ஸ்பிரஸ் ஸ்பெஷல் பிராந்தி 4 பாட்டில்கள் மூடி திறந்த நிலையில் இருந்தது. அதை பற்றி மணிகண்டன் என்பவரிடம் விசாரித்தபோது, வாசுதேவநல்லூர் பகுதியிலுள்ள அரசு மதுபானக்கடையில் மதுபாட்டில்களை வாங்கியும், அத்துடன் அதிக போதை தரக்கூடிய அதே பகுதியில் இருந்த மெடிக்கல் ஷாப்பில் அட்ரோபின் வாங்கி வந்து கலந்து விற்பனை செய்து வருவதாக கூறினார். மேலும் தங்கமாரி என்பவரை விற்பனைக்கு உதவியாக வைத்திருந்ததாக கூறினார்.

மதியம் 01.15 மணிக்கு இருசக்கரவாகனத்தை அத்தாட்சியில் பொதுநபர்கள் யாரும் வராததினால், சிறப்பு உதவி ஆய்வாளர் சுடர்ஒளிவு, தலைமைக்காவலர் தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினேன். 01.45 மணிக்கு எக்ஸ்பிரஸ் ஸ்பெஷல் பிராந்தி மூடி திறந்த நிலையில் இருந்த 4 பாட்டில்களையும் துணி வைத்து கட்டி சீல் வைத்து அத்தாட்சி தயார் செய்தேன். மீதி பாட்டில்களையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

பின்னர், எதிரியையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.157/2022, சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(i) and 4(1-A) TNP Act-ன் படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அதன் அசல் நகல்களை சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்

அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

முதல்தகவல்அறிக்கை, அத்தாட்சி ஆகியவை யார் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் நான் தான் அன்றைய தினமே கொடுத்தேன். யாருடைய உத்தரவின் பேரில் வாகனத்தணிக்கை செய்தேன் என்றால் ஆய்வாளர் உத்தரவின் பேரில் வாகனத்தணிக்கை செய்தேன். எத்தனை மணிக்கு உத்தரவு கொடுத்தார் என்றால் 12.30 மணிக்கு உத்தரவு கொடுத்தார். எந்த வாகனத்தில் ரோந்திற்கு சென்றேன் என்றால் இருசக்கரவாகனத்தில் சென்றேன். அந்த வாகனத்தின் எண் எனக்கு ஞாபகமில்லை. நான் ரோந்திற்கு செல்லாததினால் வாகனத்தின் எண் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

எதிரி வாங்கியதாக கூறிய மருந்துக்கடை எந்தக்கடை என்று எனக்கு தெரியாது. இராமநாதபுரம் - கூடலூர் ரோடு மெயின் ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் ஆள்நடமாட்டம் இருக்கும் என்றால் சரியல்ல. இராமநாதபுரம் - கூடலூர் ரோடு மெயின் ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் ஆள்நடமாட்டம் இருக்கும் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன முறையிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன முறையில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், அத்தாட்சி மூலம் எவ்வித சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் பின் யோசனையோடு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. மேலதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க புள்ளி விபரக் கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

சாட்சி சென்னை சிட்டி சிவில் நீதிமன்றம் காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Bharani, System Operator சென்னை சிட்டி சிவில் நீதிமன்றம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 1ம்எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.08.04 13:17:05 +0530